# கதைவழிச் சொல்வளத்தைப் பெருக்குதல்
# பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 12
# ‘என்ன பயன்?’

**<u>கண்ணோட்டம்:</u>**

ஆசிரியர் ‘என்ன பயன்’? என்னும் பெரிய புத்தகத்தில் இடம்பெறும் கதையில் உள்ள மறுபயனீட்டுப் பொருள்களை அறிமுகப்படுத்துவதன்மூலம் பிள்ளைகள் அப்பொருள்களின் பெயர்களைத் தெரிந்துகொள்வார்கள். மறுபயனீட்டைப்பற்றியும் அதன் முக்கியத்துவத்தைப்பற்றியும் கலந்துரையாடுவதன்வழி பிள்ளைகள் கதையுடன் தொடர்புடைய பல சொற்களை அறிந்துகொள்வதுடன் அவற்றைச் சரியாகப் பயன்படுத்தவும் கற்றுக்கொள்வார்கள்.

**<u>கற்றல் குறிக்கோள்கள்:</u>**

**<u>கற்றல் குறிக்கோள் 1: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்</u>**

1. **கதையைப்பற்றிய புரிந்துணர்வை வெளிக்காட்டுதல்**
    - ஆசிரியர் கதையை வாசிக்கையில் சொற்களைச் சுட்டிக்காட்டுதல்; வாசித்துக் காட்டப்படும் கதைக்கு ஏற்ப முகபாவங்களைச் செய்தல்

**<u>கற்றல் குறிக்கோள் 2: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

2. **தாய்மொழி நடவடிக்கைகளை விரும்புதல்**
    - புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல் (கதையைப்பற்றிக் கருத்துக் கூறுதல் அல்லது கேள்வி கேட்டல்)

**முன் தயாரிப்பு:**

**பின்வருவனவற்றை வகுப்புக்குக் கொண்டு வாருங்கள்.**

- மறுபயனீடு செய்யக்கூடிய பொருள்கள், படங்கள் (எ-டு: காலித் தகரப் பெட்டிகள், பிளாஸ்டிக் புட்டிகள், செய்தித்தாள்கள், பழைய துணிகள், கண்ணாடி ஜாடிகள், உலோகப் பொருள்கள்)
- மறுபயனீட்டுப் பொருள்கள், படங்கள் (எ-டு: பூச்சாடி, பை)

**பாட அறிமுகம்:**

1. மறுபயனீடு செய்யக்கூடிய பொருட்களையும் படங்களையும் பிள்ளைகளிடம் காட்டிப்  பேசுங்கள்.

2. 'மறுபயனீடு' என்ற சொல்லை அறிமுகப்படுத்தி விளக்குங்கள்.

3. கீழ்க்காணும் தகவல்களைப் பிள்ளைகளிடம் கூறுங்கள்.

- பொருட்களை வீணாக்காமல் அவற்றை மறுபயனீடு செய்தல் அவசியம்.

- கீழ்க்காணும் படத்திலுள்ள பொருள்களை மறுபயனீடு செய்யலாம்.



**தண்ணீர்ப்புட்டிகள்**



**அட்டைப் பெட்டிகள்**



**பிளாஸ்டிக்புட்டி மூடிகள்**

- பிளாஸ்டிக், காகிதம், கண்ணாடி, உலோகம் போன்றவற்றால் செய்யப்பட்ட பொருள்களை அனாவசியமாகத் தூக்கி எறியாது இருந்தால் குப்பை அதிகம் சேராது; சுற்றுப்புறம் மாசுபடாமல் இருக்கும்.

4. பின்னர், 'என்ன பயன்?' என்னும் கதையைப் பிள்ளைகளுடன் சேர்ந்து உயிரோட்டத்துடன் வாசியுங்கள்.




5. கதையை வாசிக்கும்போது, கதையில் வரும் சில சொற்களுக்கான படங்களைக் காட்டி விளக்குங்கள்.



**பழைய துணி**



**அழகிய பை**

6. பிள்ளைகள் புதிதாகக் கற்றுக்கொண்ட சொற்களைப் பயன்படுத்திப் பார்க்க வாய்ப்பளிக்கும் விதத்தில் பெரிய புத்தகத்தின் அடுத்த பக்கத்தைத் திருப்பாமல் கீழ்க்காணும் கேள்விகளைக் கேளுங்கள்.

   - கவின் பிளாஸ்டிக் புட்டியைக்கொண்டு என்ன செய்யப் போகிறான் என்று நினைக்கிறீர்கள்?
   - கலைவாணி பழைய துணிகளைக்கொண்டு என்ன செய்யப் போகிறாள் என்று நினைக்கிறீர்கள்?

7. நீங்கள் கொண்டு வந்த மறுபயனீட்டுப் பொருட்களையும் படங்களையும் காட்டிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.







8. பிள்ளைகள் கற்றுக்கொண்ட சொற்களை நினைவுகூர்ந்து சொல்லச்சொல்லுங்கள். (எ-டு:தண்ணீர்ப் புட்டி, பழைய துணி, அழகான பை, மறுபயனீடு, மறுபயனீட்டுப் பொருள்)

கற்றுக்கொண்ட சொற்களைப் பொருத்தமான சூழலில் பயன்படுத்திப் பார்க்கும்போது கற்றல் மேலும் வலுவடைகிறது.

*************************